**வாசிக்க**: **தானியேல்** 3:17-30

**அக்கினி ஊடாக நடந்தாலும் தீய்ந்து போவதில்லை**.

ராஜாவின் வார்த்தையை எல்லா ஜனங்களுக்கு முன்பாக கேட்காமல் போனதினிமித்தம் கடுங்கோபமூண்டு: சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுக்கு விரோதமாய் ராஜாவின் முகம் வேறுபட்டது. ஆதலால் அக்கினி சூளையைச் சாதாரணமாக சூடாக்குவதை பார்க்கிலும் ஏழுமடங்கு அதிகமாய்ச் சூடாக்கும்படி உத்தரவு கொடுத்தான். சூளை மிகவும் சூடாக்கப்பட்டிருந்ததால் அக்கினி ஜுவாலையானது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவை தூக்கி கொண்டுபோன புருஷரைக் கொன்று போட்டது. ஆனால் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்னும் அந்த மூன்று புருஷரும் கட்டுண்டவர்களாய் உயிரோடு எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே விழுந்தார்கள். ராஜா திகைத்துப்போய் அதை உற்றுபார்க்கும் போதே, அங்கே நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் கண்டான். நான்காம் நபரின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றான். உடனே நேபுகாத்நேச்சார் பயந்துபோய், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர்கள் தங்களுடைய தேவனைத்தவிர வேறொரு தேவனையும் சேவித்துப் பணியாமல், அவரையே நம்பி, என்னுடைய கட்டளையை கூட தள்ளி, தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்ததினால், அவர் தமது தூதனை அனுப்பி, தம்முடைய தாசரை விடுவித்தார், என்று சொல்லி அவரையே எல்லாரையும் ஆராதிக்க வைத்தான். அதன் பின்பு ராஜா சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைப் பாபிலோன் தேசத்திலேஉயர்த்தினான்.

**கேள்வி**:

கர்த்தருக்காக நானும் இப்படி வைராக்கியமாக நின்றால் என்னையும் இப்படி உயர்த்துவாரா..?

**பதில்**:

கர்த்தரை நம்புகிறவர்களை அவர் ஒருபோதும் கைவிடுகிற தேவனில்லை. ஆனால் இங்கே மூன்றுபேரையும் சற்று கவனித்து பார்த்தால், அவர்கள் செய்த அறிக்கையில் அவர்களுடைய அன்பின் உத்தமத்தை பார்க்கலாம். "எங்கள் தேவன் தப்புவிக்க வல்லவர்; தப்புவியாமற்போனாலும், நாங்கள் அவரைதவிர வேறேயாரையும்

தொழுது கொள்ளமாட்டோம்" என்றனர். அதனால் அவர் என்னை ஆசீர்வதித்தால், பாதுகாத்தால், பராமரித்தால், நானும் அவருக்காக காலமெல்லாம் வாழ்வேன் என்பது அன்பு அல்ல. அது வியாபாரம். நாம் பாவிகளாக, துரோகிகளாக அவரை தேடாமல் வாழ்ந்த நாட்களில் நம்மை தேடிவந்து, ஜீவன் தந்து நம்மில் அன்புகூர்ந்தாரே. எனவே நம்முடைய அன்பு எதையும் எதிர்பார்த்து இருக்க கூடாது. அப்படி நாம் நம் வாழ்கையை அர்பணிக்கும்போது அவர் நம்வாழ்வில் நமக்காக எதிர்பார்த்திராத காரியங்களையெல்லாம் செய்வார். அருமையான தம்பி தங்கச்சி ஆண்டவருக்காக வைராக்கியமாக வாழ்வாயா..?

நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன், நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை, நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய், அக்கினிஜூவாலை உன்பேரில் பற்றாது. ஏசாயா 43 :2

**ஜெபம்**

அதிசயமானவரே அற்புதமானவரே உமக்கு ஸ்தோத்திரம். பாடுகள், கஷ்டங்கள், நிந்தை வந்தாலும் இயேசப்பாவை விட்டு பிரிந்து போகமாட்டோம். எது நடந்தாலும் எங்கள் நன்மைக்கே இயேசப்பா செய்வார். அவரை அறியாமால் எதுவும் நடக்காது. ஆமென்